Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 05 (21 - 08 - 1991) புதன்கிழமை ஓசை: 184

## பரீட்சை உடன் நடத்த பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட்க்கில் ஊரடங்கு தளர்த்தப்பட்டதால் க. பொ த. பரீட்சைகளை உடன் நடத்துமாறு கோரி யாழ்.மாவட்ட கல்விப்பணிப்பாளர் பரீட்சை ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பிஉள்ளார். ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் உடனடியாகப் பரீட்சை நடைபெறும் என ஆவலுடன் காத்திருந்த மாணவர்கள் ஏமாற்றமடைந்து விரக்தியுற்றுள்ளனர். பரீட்சைகளை (4 ஆம் பக்கம் பார்க்க)

# புல்லாவெளிப்பகுதியிலிருந்து இராணுவம் வாபசானது

(இயக்கச்சி)

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து ஆனையிறவு முகாம் வரை தொடராக நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தின் ஒரு பகுதியினர் சில இடங்களில் இருந்து நேற்று வெளியேறினர்.

கடந்த மாதம் பதின் நான்காம் திகதி ஆனையிறவு முகாம் மீட்பு நடவடிக்கைக்காகத் தரையிறங்கிய 8000 இராணுவத்தினர் வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு முகாம் வரை தொடராக நிலைகொண்டிருந்தனர். இவர்களில் ஒருபகுதியினர் நேற்றுப் புல்லாவெளிப் பகுதியில் இருந்து வெளியேறினர்.

இராணுவத்தினரின் இந்த வெளியேற்றத்திற்கு புலிகள் இராணுவத்தினர்மீது தொடர்ச்சியாக மேற்கொண்ட தாக்குதலே காரணமாகும். வெற்றிலைக்கேணிக்கும்-ஆனையிறவுக்கும் இடையில் உள்ள இராணுவத்தினர் மீது புலிகள் அடிக்கடி தாக்குதல் நடத்துவதாக நேற்றிரவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

அத்தோடு அப்பகுதியில் நிலவும் கடுமையான வெப்பமும், நீர் தட்டுப்பாடும் இராணுவத்தினருக்குபெரும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளதாக சிறிலங்கா அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தனது படைகளை ஆனையிறவுப் பகுதியில்

## அம்பாறையில் தமிழர் பொலிஸால் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சென்ரல் காம்பைச் சேர்ந்த சிறிலங்கா பொலிசாரால் வயலுக்குச் சென்ற தமிழ் விவசாயி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் வயலுக்குச் சென்றுகொண்டிருந்த நான்கு பிள்ளைகளின் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ குழுவினரால் தமிழர் அடித்துக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கப்பம் கொடுக்க மறுத்த தமிழ்ப் பொதுமகனொருவரை ரெலோ குழுவினர் அடித்துக் கொலை செய்துள்ள கிழமை காலை பத்து மணியளவில் நிகழ்ந்துள்ளது. இச் சம்பவத்தில் ஆறு பிள்ளைகளின் தந்தையான பதின்மூன்றாம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் (வயது 48,

## மேஜர் டயஸ் நினைவஞ்சலிக் கூட்டம்

பருத்தித்துறையில் (1989-08-21) ஆம் திகதி இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட மூன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கிச் சுடுகுழல்கள் இரத்தச் சிவப்பேறின

### - சிறிலங்கா வைஸ் அட்மிரல்

(கொழும்பு)

சினத்தயாரிப்பு பீரங்கிப் படகுகளில் இருந்து கட்டைக்காடு- வெற்றிலைக் கேணிப் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலினால் பீரங்கிச் சுடுகுழல்கள் ரத்தச் சிவப்பாயின என சிறிலங்கா கடற்படைக் கமாண்டர் வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா தெரிவித்தார்.

கடற்படைப் பீரங்கிப்படகுகளில் பொருத்தப்பட்டிருந்த 37 எம். எம் பீரங்கிகள் குறுகிய நேரத்தில் இவ்வளவு தொகையான எறிகணைகளை வீசியதும் இதுதான் முதல் தடவை என்றும் தெரிவித்தார்.

## கீரிமலையில் இராணுவம் துப்பாக்கிச்சூடு

கீரிமலையில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் குடிமக்கள் வாழும்பகுதிகளை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் பலத்தகாயம்அடைந்துள்ளார்

நேற்று மாலைஇடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆர். வசந்தகுமார் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார். (க)

## ராஜீவ் கொலையில் சந்தேக நபர்களான

# சிவராசன், சுபா உட்பட

# 7இலங்கை தமிழர் மரணம்

(பெங்களூர்)

ராஜீவ் காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று இந்தியப் புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வந்த சிவராசனும், சுபாவும் நேற்றுக்காலை ...

பிரயோகம் செய்யப்பட்டதால் உள்ளே பெருமளவு வெடி பொருள்கள் இருக்கலாமெனக் கருதிய பொலிஸார் உடன் வீட்டிற்குள் புகவில்லை எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன ...

மீது ஏறி கூரையின் மேற்பகுதியை உடைத்து உள்ளே புகுந்தனர்.

அங்கே இறந்த இலங்கைத் தமிழர் ஏழுபேரின் சடலங்கள் காணப்பட்டதாகவும் அதில் ...

காகத் தரையிறங்கிய 8000 தொடராக நிலைகொண்டிரு

னர்.

இராணுவத்தினரின் இந்த வெளியேற்றத்திற்கு புலிகள் இராணுவத்தினர்மீது தொடர்ச்சியாக மேற்கொண்ட தாக்குதலே காரணமாகும். வெற்றிலைக்கேணிக்கும்-ஆனையிறவுக்கும் இடையில் உள்ள இராணுவத்தினர் மீது புலிகள் அடிக்கடி தாக்குதல் நடத்துவதாக நேற்றிரவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

அத்தோடு அப்பகுதியில் நிலவும் கடுமையான வெப்பமும், நீர்தட்டுப்பாடும் இராணுவத்தினருக்குபெரும்இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளதாக சிறிலங்கா அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தனது படைகளை ஆனையிறவுப் பகுதியில் இருந்து திரும்ப அழைத்துக் கொள்ளத் தொடங்கி விட்டதென நேற்றிரவு பி பி .ஸி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தமிழர் பொலிஸால் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சென்ரல் காம்பைச் சேர்ந்த சிறிலங்கா பொலிசாரால் வயலுக்குச் சென்ற தமிழ் விவசாயி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை பத்து மணியளவில் வயலுக்குச் சென்றுகொண்டிருந்த நான்கு பிள்ளைகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ குழுவினரால் தமிழர் அடித்துக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கப்பம் கொடுக்க மறுத்த தமிழ்ப் பொதுமகனொருவரை ரெலோ குழுவினர் அடித்துக் கொலை செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை பத்து மணியளவில் நிகழ்ந்துள்ளது. இச்சம்பவத்தில் ஆறு பிள்ளைகளின் தந்தையான பதின்மூன்றாம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் (வயது 48) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவர்.

(4 ஆம் பக்கம் பார்க்க) பலத்தகாயம்அடைந்துள்ளார் காயமடைந்தவராவார். (க)

### ராஜீவ் கொலையில் சந்தேக நபர்களான

# சிவராசன், சுபா உட்பட 7இலங்கை தமிழர் மரணம்

(பெங்களூர்)

ராஜீவ் காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று இந்தியப் புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வந்த சிவராசனும், சுபாவும் நேற்றுக் காலை ஆறு முப்பது மணியளவில் பெங்களூர் நகரின் ஒதுக்குப் புறத்தில் உள்ள ஒரு வீட்டில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டதாகக் கர்நாடகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொலைபேசி உரையாடல் ஒன்று ஒட்டுக் கேட்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் தங்கியிருந்தவீடு சுற்றிவளைக்கப்பட்டதாம்.

நேற்றைய இந்தச் சுற்றிவளைப்பில் நூற்றுக்கணக்கான பொலிஸார் பங்கு கொண்டனர். அச்சமயம் வீட்டிற்குள் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் உள்ளே பெருமளவு வெடி பொருள்கள் இருக்கலாமெனக் கருதிய பொலிஸார் உடன் வீட்டிற்குள் புகவில்லை எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. பின்னர் அருகில் இருந்த வீடு ஒன்றின் கூரை மீது ஏறி கூரையின் மேற்பகுதியை உடைத்து உள்ளே புகுந்தனர்.

அங்கே இறந்த இலங்கைத் தமிழர் ஏழுபேரின் சடலங்கள் காணப்பட்டதாகவும் அதில் இருவரது சடலங்கள் பெண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கில் "விபத்துப் பின்னடைவு"

(பெங்களூர்)

ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என இந்திய புலனாய்வுப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த சிவராசன் என்பவரும், சுபா என்னும் பெண்ணும் சயனைட் அருந்தி உயிரிழந்ததால் பொலிஸாரின் விசாரணையில் ''விபத்துப் பின்னடைவு'' ஏற்பட்டுள்ளதாகப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இவர்கள் இருவரும் இறந்துபோனதால் ராஜீவ் காந்தியின் படுகொலையில் புலிகள் ஈடுபட்டிருக்கக்கூடும் எனும் சந்தேகத்தைக்கூட உறுதி செய்ய இயலாத நிலை எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

### கொர்பசேவை சந்திக்க

# 24 மணி நேரத்திற்குள் ஏற்பாடு செய்யவும் - யெல்சின்

(மாஸ்கோ)

பதவி நீக்கம் செய்யப்பட்ட சோவியத் அதிபர் மிகெயில் கொர்பசேவை இருபத்து நான்கு மணி நேரத்தில் தான் சந்தித்துப் பேச வேண்டுமென ரஷ்யக் குடியரசின் அதிபர் பொரிஸ் யெலிசின் நேற்றுக் காலை கோரினார். சோவியத்தின் தற்போதைய தலைமைப் பீடத்திற்கு அவர் விடுத்த கோரிக்கையில் மேலும் கொர்பசேவுடன் ரஷ்ய தலைவர்கள் பேச வேண்டுமெனவும், இப்பேச்சுவார்த்தையின்போது தற்போதைய தலைவர் யெனாடி யெனேயோவ்வும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையில் சோவியத் நாடாளுமன்றத்தின் தலைவர் அனடோலி லுக்யானவியுடன் ரஷ்யத் தலைவர்கள் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் பேச்சு நடத்தக்கூடும் என்று செய்தியொன்று வெளியாகியுள்ளது

பொரிஸ் யெலிசின் விடுத்திருக்கும் கோரிக்கைகளில் வெளிநாட்டு வைத்திய நிபுணர் குழுவொன்று அடுத்த மூன்று தினங்களுக்குள் கொர்பசேவை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும், வைத்திய நிபுணர்களின் பரிசோதனைமுடிவு ஆக்கபூர்வமானதாக இருப்பின் கொர்பசேவ் பதவியேற்க அனுமதிக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவசரகால ஆட்சிக்குழு உடன் கலைக்கப்படல் வேண்டும். அவசரகால

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொர்பசேவ் விரைவில் கடமைக்குத் திரும்புவார்

### - புதிய சோவியத் அதிபர்

(மொஸ்கோ)

கிறைமியாவில் கொர்பசேவிற்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது என்றும், விரைவில் அவர் தமது பணிகளைமீண்டும் தொடங்கி விடுவார் என்றும் புரட்சி மூலம் பதவிக்கு வந்த சோவியத் ஜனாதிபதி கெனெடி ஜெனயாவ் தெரிவித்தார்.

நேற்று மொஸ்கோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், கொர்பசேவ் துவக்கி வைத்து நிறைவேற்றி வந்த ஜனநாயக மற்றும் சந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சோவியத் புதிய அதிபர் நரசிம்மராவிற்குக்கடிதம்

(மாஸ்கோ)

கொர்பசேவ் அவர்களை பதவியில் இருந்து நீக்கியதற்கு நியாயமும் காரணமும் காட்டி புதிதாக பதவியேற்றிருக்கும் கெனடியனயேவ் அவர்கள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு கடிதம் ஒன்று எழுதி உள்ளார்.

இந்தக் கடிதத்தில் கொர்பசேவின் பதவிக் காலத்தில் சோவியத் யூனியனின் சட்டம் ஒழுங்கு குலைந்திருந்ததாக

(4ஆம் பக்கம் பார்க்க)

### சோவியத் ஆட்சி கவிழ்ப்பு

# ஏற்றுக்கொள்ளமுடியாதது - ஜப்பான்

(டோக்கியோ)

சோவியத் யூனியனில் தற்போது எழுந்துள்ள நிலைமை ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என தற்போது புரட்சி மூலம் மாஸ்கோவில் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளவர்களுக்கு ஜப்பான் பிரதமர் கைபூ எச்சரிக்கை விடுத்துள்ளார் மேற்கத்தைய நாடுகளுடன் சேர்ந்து ஜப்பானும் பொருளாதாரதடை நடவக்கைகளை தற்போதைக்கு அமுல்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை கொர்பசேவ் பதவி விலக்கப்பட்ட போது கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளே தொடர்ந்தும் அமுல் செய்யப்படவேண்டும் என்று எகிப்து கேட்டுக் கொண்டுள்ளது.

சோவியத் யூனியனில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை அந்நாட்டின் உள் விவகாரங்கள் என்று சீனா கருத்துக் கூறியுள்ளது.

## உள்விவகாரம் - சீனா

ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் வெளியுறவு அமைச்சர் ஹேய்க் நகரில் கூடிய மாநாடு.பொருளாதார உதவிகளை நிறுத்தி வைக்கப் போவதாக முடிவு செய்துள்ளது.

கடும்போக்காளர் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டாலும் கொர்பசேவின் கொள்கை நடைமுறைபபடுத்தப்படும் என்று புதிய ஆட்சியினர் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் உறுதியான நிர்வாகத்தை அவர்களால் ஏற்படுத்த முடி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிரிமியாவில்இருந்து கொர்பி வெளியேறி விட்டார்

பதவியில் இருந்து நீக்கப்பட்ட சோவியத்ஜனாதிபதிகிரிமியாவில் இருந்து வெளியேறிச்சென்று விட்டார்எனஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. பெயர் குறிப்பிடப்படாத ஒரு இடத்தை நோக்கி புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்த ஒரு விமானத்தில் கொர்பசேவ் ஏறியதாகவும், அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் காணப்பட்டதாகவும் ஏஜென்ஸி செய்திகள் குறிப்பிடுகின்றன.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 14-06-1962 — தாயக விடிவில் 21-08-1989

முன்னாள் அம்பாறை, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

## மேஜர் டயஸ் கந்தசாமி

(மயில்வாகனம் தவராஜா ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்)

"யாழ் நகரமே இந்திய ஆக்கிரமிப்பாளரின் இரும்புப் பிடிக்குள் இருந்த வேளையிலும் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் மாணவனைப் போலவும், ஆசிரியர்கள் மத்தியில் ஆசிரியனைப் போலவும் ஊழியர்கள் மத்தியில் ஊழியனைப் போலவும் நிமிர்ந்து நின்று கொண்ட இலட்சியத்தின் கொள்கை வழியே நீ உழைத்த நாட்களை ஒரு கணம் எண்ணித் தவிக்கின்றோம். மீண்டும் அதே நினைவுகளுடன் உனது பாதையில் எமது பயணங்கள் ... ... ..."

யாழ். பல்கலைக்கழக மாணவ நண்பர்கள்.

யாழ்ப்பாணம்.

(B/2962)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## கப்டன் அரசன்

(சோமசேகரம் யோகேந்திரன்)

வீரஜனனம் 27-07-1971 — வீரமரணம் 22-07-1991

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெளி நிலைப் பட்டப் படிப்பிற்காகப் பதிவு செய்தல் 1990/91

(வர்த்தக முதற் தேர்வு / கலை முதற் தேர்வு)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் 1990/91 கல்வி யாண்டில் வெளிநிலைத் தேர்வு நாடிகளாக வர்த்தக முதற் தேர்வு / கலை முதற்தேர்வுகளுக்குப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து 1991 செப்ரெம்பர் 30 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களும் உரியவிபரங்களும்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளி நிலைப்பதிவு தேர்வு அலகிலிருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1991 ஆகஸ்ட் 21ஆம் தேதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின்பிர

[illegible]

கல்வி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த. சா/த கடைசித் தகைமையாகும். நேரில் வர முடியாதோர் கடித வழியிலும் கற்கலாம். பாலராசிரியர் சங்கம்; மே/பா உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (டீ 1657)

## சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை அலுவலகத்தில் கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை விடப்பட்ட புத்தம்புதிய லேடீஸ் சயிக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

அன்புடன் அழைக்கின்றோம்!
மகிழ்ச்சிகரமான ஆரம்பம்!!

22 - 08 - 1991 வியாழக்கிழமை
முற்பகல் 11-35 மணிக்கு
யாழ்ப்பாணம் ப நோ கூ. சங்கத்தின்

யாழமுதம்

உழைப்போர் உணவகம்
291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுத்தம், சுவை, தரம் நிறைந்த இத்திக்கும் தின்பண்டங்கள், தேனீர், பால், குளிர்பானம்: உங்களது அன்பான வரவை எதிர்பார்க்கிறோம்.

நன்றி - வணக்கம்

மு.சிவப்பிரகாசம் — பொதுமுகாமையாளர்
சொலமன் சூ.சிறில் — தலைவர்
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

(B/2966)

## பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான

# அறிவித்தல்

மேற்படி பல்கலைக் கழகத்தில் பதிவுசெய்து பரீட்சைக்குத் தோற்றாத பின்வரும் கல்வியாண்டு மாணவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1989/90 கலை முதற் தேர்வு மாணவர்கள்
1990/91 கலை முதற் தேர்வு மாணவர்கள்
1989 டிசம்பர் பரீட்சைக்கு தோற்றாத கலைமாணி மாணவர்கள்
1990 டிசம்பர் பரீட்சைக்கு தோற்றாத கலைமாணி மாணவர்கள்

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B/2968)

நினைவு





## கப்டன் அரசன்

**(சோமசேகரம் யோகேந்திரன்)**

வீரஜனனம் 27-07-1971 வீரமரணம் 22-07-1991

"விடுதலை வேட்கையுள்
வேங்கையே யாவான்"

- நண்பர்கள்.

(B/2977)

---

## 2-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

வீரஜனனம்: 24 - 07 - 1968



வீரமரணம்: 21 - 08 - 1989

### லெப்டினன்ட் சுதா (யூசி)

**(இராசதுரை சுதர்ஷன்)**

மாவீரனே! சுதா எங்கள் மாணிக்கமே!
மறைந்து நீ இரண்டாண்டு போனாலும்
எங்கள் நினைவில் நீங்காத செல்வமே!
எம் நெஞ்சை விட்டு நீ அகலவில்லையே!

துவக்கைத் தூக்கினாய் இந்தியப் பேயை ஓட்ட
துவளாமல் போராடி வெற்றியும் கண்டாய்
சொந்த மண்ணுக்கு உன் குருதியைத் தந்தாயே
சொல்லாமல் கொள்ளாமல் எம்மை விட்டுப்பிரிந்தாயே!

உனது பாதையிலே பல்லாயிரம் வேங்கைகள்
உன்னத சாதனைகள் படைக்கும் இவ்வேளையில்
ஆனையிறவிலே திருப்பு முனைப் போர் நடக்குதய்யா!
ஆனாலும் வெற்றி உன் வழி நடக்கும்
வேங்கைகளுக்குத்தான்.

-குடும்பத்தினர்.

"சுந்தர நிவாஸ்"
வி. எம் வீதி,
பருத்தித்துறை.

(B-2965)

---

முதற்தேர்வுகளுக்குப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து 1991 செப்ரெம்பர் 30 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களும் உரியவிபரங்களும்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளி நிலைப்பதிவு தேர்வு அலகிலிருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1991 ஆகஸ்ட் 21ஆம் தேதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின்பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை / தபாற்கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா08/- பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட 38 x 25 ச. மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

இவ்வாண்டு கலை முதற் தேர்வு / வர்த்தக முதற் தேர்வு என்பனவற்றிலிருந்து விலக்குப் பெற விரும்புவோர் அல்லது கலை முதற் தேர்வு / வர்த்தக முதற் தேர்வு தவிர்ந்த ஏனைய தேர்வுகளுக்காக தமது பதிவுகளை மற்றைய பல்கலைக்கழகங்களிலிருந்து இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக் கொள்ள விரும்புவோர் ஆகியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்

(B/2972)

---

டுக கொள்ளப்படுவார்...

1989/90 கலை முதற் தேர்வு மாணவர்கள்
1990/91 கலை முதற் தேர்வு மாணவர்கள்
1989 டிசம்பர் பரீட்சைக்கு தோற்றாத
கலைமாணி மாணவர்கள்

1990 டிசம்பர் பரீட்சைக்கு தோற்றாத
கலைமாணி மாணவர்கள்

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B/2968)

---

## நினைவு கூருகின்றோம்...



1991 - 08 - 21

**மேஜர் டயஸ்**

1988 ஆம் ஆண்டு இதேதினத்தில் இந்தியப் படையினருடனான
மோதலில் வீரமரணமெய்திய

2ஆம் லெப். புவி (இளையதம்பி ஆனந்தன் - அம்பாறை)

அக்கரைப்பற்றில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட
தமிழ் இளைஞன்

1989 ஆம் ஆண்டு அம்பாறை, டிப்போமடுப் பகுதியில் இந்தியப்
படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

நளின் (பிள்ளைக்குட்டி அஜித்குமார் - பொத்துவில், அம்பாறை)

அலன் (சின்னத்தம்பி செல்லத்துரை - நற்பிட்டிமுனை - 07)

பருத்தித்துறை, தம்பசிட்டி, நாவலடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான
மோதலில் வீரமரணமெய்திய யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர்

மேஜர் டயஸ்/கந்தசாமி (மயில்வாகனம் தவராசா - ஈச்சமோட்டை)

சுதா/யூசி (இராசதுரை சுதர்சன் - பருத்தித்துறை)

திக்கம், அல்வாய் மேற்கு, பூபாஞ்சோலை, வியாபாரிமூலை, நாவலடிச் சந்தி ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இருதயக் கல்லூரி உயர் வகுப்பு மாணவன் உட்பட 11 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்/பாஷையூர், வட்டுக்கோட்டை, அச்சுவேலி, புற்றளை ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட சிறுவர்கள், பெண்கள் உட்பட 13 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

: விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2963)

### சிந்தனைக்கு

சிறு தீயை மிதித்து விரைவில் அணைக்கலாம்;
பெருக விட்டால் ஆறுகளும் அவிக்கமுடியாது
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 21-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

## மீண்டும் உலகில் கெடுபிடிப் போர்?

சோவியத் அதிபர் மிகையில் கொர்ப்பசேவ் இரத்தம் சிந்தா சதிப் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்டமை இந்தாண்டில் வளைகுடாப் போருக்கு அடுத்ததான முக்கிய அரசியல் நிகழ்ச்சியாகும். ஆனால் இந்த விவகாரம் வளைகுடாப் போரைவிட பெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததெனலாம்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நிலவி வந்த கெடுபிடி யுத்தமும். ஆயுதப் போட்டியும் கொர்ப்பசேவின் காலத்துடன் முற்றுப் பெற்று இருபத்தியோராம் நூற்றாண்டில் உலகம் புதியதொரு ஒழுங்கில் செல்வதற்கான முஸ்திபுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் சோவியத் யூனியனில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம் பெற்றுள்ளது.

1985ஆம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற கொர்ப்பசேவ் 1988இல் சோவியத் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். படிப்படியாக சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியாக மாறினார். கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக திரு. கொர்ப்பசேவ் பதவி ஏற்றதும் சோவியத்யூனியனில் பல அரசியல் மாற்றங்களைக் கொண்டுவர முயன்றார். சோவியத்யூனியனை மூடியிருந்த இரும்புத் திரை அகற்றப்பட்டது. மறு சீரமைப்பும் - பெரஸ் ரொய்காவும் - திறந்த செயற்பாடும் - கிளாஸ் நொஸ்கும் - நடைமுறைப் படுத்தப்படத் தொடங்கின.

கொர்ப்பசேவின் இந்தக் கொள்கைகள் சோவியத் யூனியனின் தேவை கருதிச் செய்யப்பட்டனவா, இல்லையா என்பது ஒரு புறம் இருக்க இந்தக் கொள்கைகள் சோவியத்யூனியனில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. சோவியத்யூனியனின் குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்தன. வேலை நிறுத்தங்களும் பொருளாதார நெருக்கடிகளும் என்றுமில்லாதவாறு தலை தூக்கின.

சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் அந்தஸ்துக் குறைந்தது. முதலாந்தர வல்லரசு என்ற நிலையில் இருந்து கீழ் இறங்கியது. கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் பிடி தளர்ந்தது. வோர்சோகலைக்கப்பட்டது.

## 1985 இல் இருந்து 1991 வரை மிகையில் கொர்ப்பசேவ்

(மாஸ்கோ)

சோவியத்அதிபராக இருந்த மிகெயில்கொர்ப்பசேவ் 1985ம் ஆண்டில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பைஏற்றார். 1988-ம் ஆண்டு அவர் சோவியத் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். 1990ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மிகப்பெரும் அதிகாரங்களுடன் உருவாக்கப்பட்ட புதிய சோவியத் நிர்வாக ஜனாதிபதி பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொர்ப்பசேவே சோவியத் அரசியலில் கொள்கைமாற்றங்களை ஏற்படுத்தியவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. பெரஸ்ரொய்கா என்னும் மறுசீரமைப்புக்கொள்கை மற்றும் கிளாஸ்நொத் என்னும் "பகிரங்க செயற்பாட்டுக் கொள்கை" என்பவற்றை முன்மொழிந்து அமுலாக்கினார். அரசியல் கருத்துவேறுபாடு காரணமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த பலரை விடுதலை செய்தது; பத்திரிகைத் தணிக்கை முறையை ரத்துச் செய்தது; கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் செயற்பட்ட நாடாளுமன்றத்திற்குப் பதிலாக மேற்கத்தையஜனநாயக அமைப்பைத் தோற்றுவிக்க முனைந்தார்.

அதேபோல் சர்வதேச அரசியலில் பனிப்போர் முறை என்னும் முறுகல் நிலையைத் தளர்த்தி மிதவாதப்போக்கை கைக்கொண்டமையால் புதிய உறவு நிலைகளை ஏற்படுத்தினார். செக்கோஸ்லவாக்கிய, ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி போன்ற கிழக்கைரோப்பிய நாடுகளில் இருந்து சோவியத் படைகளை மீளப்பெறும் முடிவுகளை மேற்கொண்டார். ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை முற்றாக விலக்கிக் கொண்டார். அமெரிக்க அதிபர்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொண்டார். சீன-சோவியத் உறவுகளிலிருந்த கசப்பு நிலையைப்போக்க நடவடிக்கையைஎடுத்தார். ஜப்பானுக்கும் விஜயம்மேற்கொண்டார்.

## கொர்பியின் பதவி நீக்கத்திற்கு இந். கம்யூனிச கட்சி ஆதரவு

(டில்லி)

கொர்ப்பசேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டதை வரவேற்று இந்திய மாக்சிய கம்யூனிச கட்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சோவியத் யூனியனில் மிக முக்கியமான பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இன்றைய நெருக்கடி நிலைகளில் இருந்து சோவியத் யூனியன் மீண்டு நாட்டின் ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப் பாட்டையும் [illegible]த்து சோசலிச பாதையில் முன்னேறும் என்றும், அதற்கு கொர்பசேவின் பதவி நீக்கம் துணைபுரியும் என்றும் இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## தங்கச் சுரங்கத்தில் 50 சிறுவர்களின் சடலங்கள்

(லீமா)

பிறேசில் எல்லையில் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்ட ஐம்பது சிறுவர்களின் சடலங்களை பெரு அதிகாரிகள் கடந்த 15ஆம் திகதி கண்டெடுத்தனர் என பெரு தொழிலமைச்சு அறிவித்துள்ளது.

பட்டினி, துப்பாக்கிச் சூடு மற்றும் சித்திரவதை போன்ற காரணங்களினாலேயே இவர்கள் உயிர் இழந்தனர் என்றும் இச்சிறுவர்கள் தப்பிச் சென்றால் கொல்லப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன் தங்கச் சுரங்க நிர்வாகிகளுக்கு அதிக விலைக்கு விற்கப்பட்டிருந்த

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும் மாவீரர் தினப் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலைகலாசாரப் போட்டிகளின் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3 சிறுகதை
4. கவிதை 5. சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வம் ஆற்றல்மிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்.

### போட்டிகளுக்கான விதிமுறைகள்

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரி மீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக

1985ஆம் ஆண்டு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற கொர்ப்பசேவ் 1988இல் சோவியத் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். படிப்படியாக சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியாக மாறினார். கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக திரு. கொர்ப்பசேவ் பதவி ஏற்றதும் சோவியத்யூனியனில் பல அரசியல் மாற்றங்களைக் கொண்டுவர முயன்றார். சோவியத்யூனியனை மூடியிருந்த இரும்புத் திரை அகற்றப்பட்டது. மறு சீரமைப்பும் - பெரஸ் ரொய்காவும் - திறந்த செயற்பாடும் - கிளாஸ் நொஸ்கும் - நடைமுறைப் படுத்தப்படத் தொடங்கின.

கொர்ப்பசேவின் இந்தக் கொள்கைகள் சோவியத் யூனியனின் தேவை கருதிச் செய்யப்பட்டனவா, இல்லையா என்பது ஒரு புறம் இருக்க இந்தக் கொள்கைகள் சோவியத்யூனியனில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. சோவியத்யூனியனின் குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்தன. வேலை நிறுத்தங்களும் பொருளாதார நெருக்கடிகளும் என்றுமில்லாதவாறு தலை தூக்கின.

சர்வதேச அரங்கில் சோவியத்யூனியனின் அந்தஸ்துக் குறைந்தது. மூலாந்தர வல்லரசு என்ற நிலையில் இருந்து கீழ் இறங்கியது. கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் பிடி தளர்ந்தது. வோர்சோகலைக்கப்பட்டது.

அமெரிக்காவும் மேற்குலகமும் தமக்குச் சாதகமான உலக அரசியல் ஒழுங்கொன்றை வகுக்க முன்வந்தன.

கொர்ப்பசேவின் அரசியற் சீர்திருத்தங்கள் மேற்குலகத்தினால் வரவேற்கப்பட்டன. ஆனால், கொர்ப்பசேவ் எதிர்பார்த்த பொருளாதார உதவியை அவை வழங்கவில்லை. மேற்குலகம் மேலும் மேலும் சீர்திருத்தங்களைக் கோரின. மேற்குலகம் கோரிய சீர்திருத்தங்கள் சோவியத் யூனியனில் 'ஐனநாயக சீர்திருத்தங்களாக' அன்றி சோவியத் யூனியனின் அழிவுக்கா எனக் கேள்விகள் எழும்பும் நிலை ஏற்பட்டது. இதனால் கொர்ப்பசேவ் பெரும் இக்கட்டில் சிக்கினார். இருப்பினும் மேற்குலகிற்கு கொர்ப்பசேவ் பணிந்து கொண்டு செல்வதைத் தவிர அவருக்கு வேறு வழி தெரியவில்லை.

இறுதியில் கொர்ப்பசேவ் மேற்கின் பெருவிருப்பான கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோகத்தை ஒழிக்க முற்பட்டார். கம்யூனிஸ்ட் கட்சியின் மீது தடைகள் விதிக்க முற்பட்டார்.

ஆனால், கடந்த காலத்தில் சோவியத் ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் கட்சியும், உளவு ஸ்தாபனமான கே. ஜி. பி. யும், இராணுவமுமே முக்கிய சக்திகளாக இருந்தன. அரசியலிலும் அவற்றின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. இராணுவமும், கே. ஜி. பி. யும் உலக விவகாரங்களில் சோவியத்தின் முதன்மை இழந்ததை அங்கீகரிக்கத் தயாராய் இருக்கவில்லை. வளைகுடாப் போரில், கொர்ப்பசேவின் தீர்மானங்கள் அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தன.

அதேவேளை கொர்ப்பசேவின் சீர்திருத்தக் கொள்கைகளால் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், கே. ஜி. பீக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இருந்த பலமான உறவை உடைக்க முடியவில்லை. தனித்தனியாக அவற்றின் கட்டமைப்புக்களையும் சீர்குலைத்து விடவில்லை.

இந்தநிலையில், கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாடுகள் மீது கொர்ப்பசேவ் கைவைக்க ஆரம்பித்ததும் மூன்று சக்திகளும் சேர்ந்து கொர்ப்பசேவின் ஆட்சிக்கு முடிவு கட்டியுள்ளன.

இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் ஏற்பட்ட அதிகார மாற்றத்தை நிலை நிறுத்த சோவியத்தில் இரத்தம் சிந்தப்படும் போல் தெரிகின்றது. ஆனால், இந்த ஆட்சி மாற்றம் சோவியத்தினுள் கொர்பசேவ் மேற்கொண்ட அரசியல் சீர்திருத்தங்கள் சிலவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதோடு மேற்குலகின் சோவியத் தொடர்பான கொள்கைக்கும், சர்வதேச அரசியல் தொடர்பான சிந்தனைக்கும் தடைக்கல்லாக அமையும் என்றும் துணிந்து கூறலாம்.

கொர்ப்பசேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டதை வரவேற்று இந்திய மாக்சிய கம்யூனிச கட்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சோவியத் யூனியனில் மிக முக்கியமான பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இன்றைய நெருக்கடி [illegible] ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப் பாட்டையும் [illegible] த்து சோசலிச பாதையில் முன்னேறும் என்றும், அதற்கு கொர்பசேவின் பதவி நீக்கம் துணைபுரியும் என்றும் இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## தங்கச் சுரங்கத்தில் 50 சிறுவர்களின் சடலங்கள்

(லீமா)

பிறேசில் எல்லையில் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்ட ஐம்பது சிறுவர்களின் சடலங்களை பெரு அதிகாரிகள் கடந்த 15ஆம் திகதி கண்டெடுத்தனர் என பெரு தொழிலமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சிறுவர்கள் அடிமைகள் என நம்பப்படுவதாகவும் பட்டினி, துப்பாக்கிச் சூடு மற்றும் சித்திரவதை போன்ற காரணங்களினாலேயே இவர்கள் உயிர் இழந்தனர் என்றும் இச்சிறுவர்கள் தப்பிச் சென்றால் கொல்லப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன் தங்கச் சுரங்க நிர்வாகிகளுக்கு அதிக விலைக்கு விற்கப்பட்டிருந்தனர் என்றும் பெரு தொழிலமைச்சு அறிவித்தது.

### மனித உரிமைகளை மீறும்

## மூன்றாம் உலக நாடுகளுக்கு பிரி. உதவி நிறுத்தப்படும்

(லண்டன்)

மனித உரிமைகளை மீறும் மூன்றாம் உலக நாடுகளுக்கு பிரித்தானியா உதவி அளிக்காது என்றும், ஐரோப்பிய சமூகமும் இந்த உதாரணத்தைப்பின்பற்ற வேண்டும் என தாம் விரும்புவதாகவும் பிரித்தானியா கேட்டுள்ளது

பிரித்தானியாவின் கடல் கடந்த அபிவிருத்தி அமைச்சர் லிண்டா சார்கர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் இதனைத் தெரிவித்தார். தவறான ஆட்சியாளர்கள் சர்வாதிகார நடவடிக்கை மூலம் ஏற்படும் விளைவுகளிலிருந்து தங்களை பிணை எடுக்க வல்லரசுகளின் உதவியை இனியும் எதிர்பார்ப்பதற்கில்லை என்றும் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் இது குறித்து ஐரோப்பியசமூக நாடுகளின் நிர்வாகக் குழுவிற்கு எழுதியிருக்கிறார் என்றும், லிண்டா சார்கர் தெரிவித்தார்.

### நல்லூர் உற்சவத்திற்கு வருவோர்

## பொருள்களில் கவனமாக இருக்க வேண்டும்

(கொழும்புத்துறை)

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலய வழிபாட்டிற்கு வரும் மக்கள் தங்கள் துவிச்சக்கர வண்டிகளையும், ஏனைய பொருள்களையும் பாதுகாப்பாக அதற்குரிய இடங்களில் வைக்கும்படியும், பிள்ளைகளைத் தவறவிட்டோர் ஆலய மேற்கு வீதியில் உள்ள யாழ். மாநகர சபை சுகாதாரக் கந்தோரில் நேரில்வந்து அறிவிக்கும் படியும் கோரப்பட்டுள்ளனர்.

ஆலய வழிபாட்டிற்குவரும் மக்கள் ஒழுங்குமுறைகளை கைக்கொள்ளும்படியும், பெண்கள் நகைகள் அணிந்துவருவதையும் கூடியளவு தவிர்த்துக் கொள்ளும்படியும் யாழ். மாநகர சபை ஆணையாளர் கடந்த திங்கட் கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஆலயத் திருவிழாக்கள் முடிவுற்றதும் மக்களைத் தாமதமின்றித் தங்கள் வீடுகளுக்குச் செல்லும்படியும் ஆணையாளர்கேட்டுக்கொண்டுள்ளார். (24)

[illegible]

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரி மீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும் போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**மாணவர்களே!**
**போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்**

மாணவர்களுக்கான போட்டிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். ஓவியங்கள் 18X12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும் கட்டுரைகள் கீழ் வரும் அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3, தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்
4 இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப் பணிகள்
5. போராடுவதற்காகக் கற்போம்..

மேற்கண்ட தலைப்புக்களில் கட்டுரைகள் 2,500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

1 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ்ப் பிரிவு
2. 15 - 17வயதுக்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17வயதுக்கு மேற்பட்டோர் மேற் பிரிவு

**ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்**

கச்சதீவு விவகாரத்தில்

# சிறிலங்கா நடவடிக்கை குறித்து

# இந்திய அரசாங்கம் கவலை

(சென்னை)

இந்திய மீனவர்கள் கச்சதீவு கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு சிறிலங்கா தடுத்து வருவது குறித்து இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவரிடம் இது குறித்து இந்திய வெளியுறவு அமைச்சின் கூட்டுச் செயலாளர் அபயங்கர் தெரிவித்தார். இந்திய மீனவர்களின் படகுகள்மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அபயங்கர் இலங்கைத் தூதுவரை கேட்டுள்ளார்.

1974, 1976ஆம் ஆண்டு இந்திய-இலங்கை கடற் பிராந்திய உடன்படிக்கையின்படி இந்திய மீனவர்களுக்குரிய பாரம்பரியமான உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் இலங்கைத் தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின்படி கச்சதீவு மீது இலங்கையின் ஆதிபத்திய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றாலும், இந்தத் தீவிற்குள் இந்திய மீனவர்கள் செல்வதற்கான பாரம்பரிய உரிமை அனுமதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர் 1982-ம் ஆண்டு இந்த உரிமை மறுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கர்நாடக அரசாங்கம்

## இலங்கைத் தமிழர் பற்றி தீவிர பரிசீலனை

. - பங்காரப்பா

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்திலுள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களது விபரங்களைப் பதிவு செய்துகொள்வது பற்றி தமது அரசு தீவிரமாகப் பரிசீலிப்பதாகக் கர்நாடக முதல்வர் எஸ். பங்காரப்பா கூறியுள்ளார். செய்தியாளர்களிடம் இந்தகவலைக் கூறிய அவர், சட்ட விரோதமாக இருந்து வரும் இலங்கைப் பிரஜைகளை அடையாளம்காணப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவின் கீழ் சிறப்பு அலுவல் படையொன்று அமைக்கப்படும் என்றும் கூறினார்.

பெங்களூரில் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களுடனான துப்பாக்கிச் சண்டையின் காயமடைந்த பொலிஸார் மூவருக்கும் தலா இருபத்தையாயிரம் ரூபாவை அளிக்கப்போவதாகவும் கர்நாடக முதல்வர் பங்காரப்பா அறிவித்தார்.

## யாழ். செயலகம்புனரமைக்க 8 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்)

யாழ். செயலககட்டடத்தை புனரமைப்பதற்கு சுமார் எட்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

வெளி நாட்டு உதவித்திட்டம் ஒன்றின் ஊடாக யாழ். மாவட்டத்திற்கு கிடைத்த நிதியின் ஒரு பகுதியே இவ்வாறு யாழ். செயலகத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இச் செயலகம் இந்திய, இலங்கை ஆகிய இரு இராணுவ நடவடிக்கைகளாலும் சேதமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

சோவியத்

...வும் கொர்பசேவின் தலைமையின் கீழ் அரசு சரியாகச் செயற்படவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அத்துடன் இனிவரும் காலத்தில் சோவியத் யூனியனில் சீர்திருத்தங்கள் குறித்து அவதானத்துடனும் நிதானத்துடனும் செயல்படபோவதாக

24 மணி

ஆட்சிக் குழுவின் தீர்மானங்கள் ரத்துச் செய்யப்பட

## பிரதம நீதியரசராக எச். டி. தம்பையா

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய பிரதம நீதியரசராக எச். டி. தம்பையா நேற்றுக்காலை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கிலும் இவர்தான் தலைவராக இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் டயஸ்

...ளால் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளரும் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளருமாகிய மேஜர் டயஸ்-கந்தசாமியின் (ம. தவராசா ஈச்சமோட்டை) 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று டயஸ் வீதியிலுள்ள வைரவ கோயிலடியில் மாலை 5-00 மணிக்கு நடைபெறும். இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் கலந்துகொண்டு நினைவஞ்சலியுரையை நிகழ்த்தவுள்ளனர்.

## அரியாலையில் போர்க்கால கருத்தரங்கு

(அரியாலை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் போர்க்காலக் கருத்தரங்கொன்று அரியாலை அருணோதய சனசமூக நிலைய முன்றலில் இன்று (21-08-91) பிற்பகல் 6 மணியளவில் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ள மேற்படி கருத்தரங்கில் விசேட வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. (11)

## ஆசிரியர் தினத்தையொட்டி சிறுகதை, கவிதைப் போட்டி

(நல்லூர்)

உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டம் தொடர்பாக ஆசிரியர்களிடையே சிறுகதை, கவிதை, நாடக, கட்டுரைப்போட்டிகளை நடத்தக் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. சிறந்தவை எனத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கவும், அவைகளைப் பிரசுரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சிறுகதைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கருப்பொருள் கற்பித்தல் சார்ந்ததாகவும் கற்பித்தல் தொழிலுடன் சம்பந்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும் 3500 சொற்களுக்கு மேற்படாமல் சிறுகதை அமைதல் வேண்டும். கவிதை, நாடகத்துக்கான கருவும் மேற்கூறிய வகையிலேயே அமைதல் வேண்டும். நாடகம் 30 நிமிடங்களுக்கானதாக இருத்தல் அவசியம்.

ஆராய்சிக் கட்டுரைகள் ஆய்வு செய்பவரின் பிரதேசத்துக்குட்பட்ட கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் குறிப்பதாக இருக்க வேண்டும்.

போட்டி விபரங்கள் அடங்கிய சுற்றுநிருபங்கள் அனைத்துப் பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## மணலாற்றில் மீன் பிடிக்கு ஆய்வு நிறுவனம் உதவி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் கடற்றொழில் அபிவிருத்திக்கு புதிய நடவடிக்கைகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் எடுத்து வருகின்றது.

உற்பத்தி செய்யப்படும் மீன் உணவை சந்தைப்படுத்துவதற்கும், சேமிப்பதற்கும் வேண்டிய பல உதவிகளும், ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இம் மாவட்டத்தில் சுமார் 180 குடும்பங்கள் நேரடியாக நன்மையடைந்து வருகின்றன,

## எரிபொருள் திருட்டு

(தாவடி)

தாவடியிலுள்ள இ. தோமஸ் சிறிதரன் என்பவருடைய கடையின் ஓடுகளைப் பிரித்து நேற்றுமுன்தினம் இரவு இறங்கிய திருடர்கள் கடையில் இருந்த ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பெற்றோல், ஒயில் என்பவற்றினைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இக்கடையில் நடந்த இரண்டாவது திருட்டு இதுவாகும். (56)

மீன் பதனிடல்

## புதியமுறை அறிந்திருந்தால் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மீன்பதனிடலில் பாரம்பரிய மற்ற புதியமுறைகளை கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் உற்பத்தியாகும் மீன் உணவுகளை பழுதடையாமல் சேமிப்பதில் புதிய முறைகள் பற்றி அறிந்தவர்கள் அல்லது இத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

## இலவச தாதியர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அவசரகால தாதியர்சேவையின்கீழ் இலவச தாதியர் பயிற்சி நெறி ஒன்று சாயி மருத்துவக் கல்லூரியில் பயிற்றப்பட்டுவருகின்றது.

அவசரகால தேவைகளின் போது சேவையாற்ற விரும்பும் ஆண்கள் இந்த தாதியர் பயிற்சி நெறியை பூர்த்தி செய்யலாம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டடங்களுக்குப் பதிலாக கொட்டகைகள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்களுக்குப் பதிலாக தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், குருநகர் சென்ஜேம்ஸ் கல்லூரி, நாகர்...

...களிற்கு வேண்டிய கொட்டகைகள் அமைக்கும் வேலைகளை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (க)

## இலங்கைத்தொழிலாளர்கள் புருணையில் அவதி

விரும் இலங்கைப் பிரஜைகளை அடையாளம்காணப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின்

அங்கைப்போவதாகவும் நாடக முதல்வர் பங்காரப்பா அறிவித்தார்.

# யாழ். செயலகம்புனரமைக்க 8 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்)

யாழ். செயலகக்கட்டடத்தை புனரமைப்பதற்கு சுமார் எட்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

வெளி நாட்டு உதவித்திட்டம் ஒன்றின் ஊடாக யாழ். மாவட்டத்திற்கு கிடைத்த நிதியின் ஒரு பகுதியே இவ்வாறு யாழ். செயலகத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இச் செயலகம் இந்திய, இலங்கை ஆகிய இரு இராணுவ நடவடிக்கைகளாலும் சேதமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

---

சோவியத்

வும் கொர்பசேவின் தலைமையின் கீழ் அரசு சரியாகச் செயற்படவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அத்துடன் இனிவரும் காலத்தில் சோவியத் யூனியனில் சீர்திருத்தங்கள் குறித்து அவதானத்துடனும் நிதானத்துடனும் செயல்படபோவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இருந்தும்கொர்பசேவ் காலத்தில் சோவியத் யூனியன் சர்வதேச நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள் இணக்கங்கள் அனைத்தையும் மதித்து நடக்கப்போவதாகவும் யனயேவ் தனது படித்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

24 மணி

ஆட்சிக் குழுவின் தீர்மானங்கள் ரத்துச் செய்யப்பட வேண்டும்: தகவலறிவிப்பு சாதனங்கள் மீதான தடையுத்தரவு உடன் விலக்கப்படல் வேண்டும்; ரஷ்யாவின் நெருக்கடி நிலை உடன் நீக்கப்படவேண்டும் என்பன போன்ற பிரகோரிக்கைகளையும் பொரிஸ் யெல்சின் முன் வைத்துள்ளார்.

---

ளிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கிலும் இவர் தான் தலைவராக இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

மேஜர் டயஸ்

னாள் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளரும் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளருமாகிய மேஜர் டயஸ்-கந்தசாமியின் (ம. தவராசா ஈச்சமோட்டை) 2ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று டயஸ் வீதியிலுள்ள வைரவ கோயிலடியில் மாலை 5-00 மணிக்கு நடைபெறும். இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு நினைவஞ்சலியுரையை நிகழ்த்தவுள்ளனர்.

---

புல்லாவெளி

அறிவித்தது. மேலும் ஆயிரக் கணக்கான படையினர் திரும்பிச் சென்றுகொண்டிருக்கின்றனர் என்றும், சிறிதளவு படையினர் ஆனையிறவில் தங்கியிருப்பார்கள் என்றும் தெரிவித்தது.

---

பரீட்சை

நடாத்துமாறு பெற்றோரும் மாணவர்களும் தன்னை நெருக்கி வருவதாகவும் சாதாரணபரீட்சையை நடாத்துவது பின்போடப்பட்டு வருவதால் பாடசாலைகளில் இடநெருக்கடிகள் தோன்றியுள்ளதாக அதிபர்கள் தனது கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவற்றைக் கருத்தில் கொண்டு க. பொ. த. உயர் தரப்பரீட்சை (1991) க.பொ. த. (சா. த) பரீட்சை (1990) பரீட்சைகளையும் இதுவரை நடைபெறாத செய்முறைப் பரீட்சைகளையும் (89, 90 சங்கீதம், நடனம், சித்திரம்) நடாத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

---

அம்பாறையில்

தந்தையான பதின் மூன்றாம் கிராமத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிறிதரன் என்ற விவசாயியே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார்.

---

கொர்பசேவ்

தைப் பொருளாதார சீர்திருத்தங்களை தம்முடைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

---

(யாழ்ப்பாணம்)

மீன்பதனிடலில் பாரம்பரிய மற்ற புதியமுறைகளை கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் உற்பத்தியாகும் மீன் உணவுகளை பழுதடையாமல் சேமிப்பதில் புதிய முறைகள் பற்றி அறிந்தவர்கள் அல்லது இத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

# கட்டடங்களுக்குப் பதிலாக கொட்டகைகள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்களுக்குப் பதிலாக தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், குருநகர் சென் ஜேம்ஸ் கல்லூரி, நாகர் கோயில் அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலை, சீனன் கட்டு ஞானோதையாக் கல்லூரி, ஆகிய பாடசாலைகளில் மேற்படி கொட்டகைகள் அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட ஏனைய பாடசாலைகளிற்கு வேண்டிய கொட்டகைகள் அமைக்கும் வேலைகளை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (க)

---

சிவராஜன்

கள் உடையது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதில் ஆறுபேர் சயனைட் உட்கொண்டு மரணமடைந்துள்ளதாகவும் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் துப்பாக்கியால் சுட்டுத்தற்கொலை செய்து கொண்டவர் தேடப்பட்டுவந்த சிவராசன் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் இறந்தவர்களில் மூவர் மாஸ்டர், சுரேஸ், அப்பன் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் ஒரு ஏ.கே.47 ரக துப்பாக்கியும்ம், ஒருகைத் துப்பாக்கியும் சில வெடி பொருள்களும் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த உடல்களை கைப்பற்றுவதற்கு பொலிஸார் பல மணி நேரம் சண்டையிட்டதால் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஒரு பொலிஸ்காரரும் காயமுற்றதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட உடல்கள் பெங்களூரில் உள்ள வைத்தியசாலையில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் வைக்கப்பட்டுள்ளன.

---

இக்கடையில் நடந்த இரண்டாவது திருட்டு இதுவாகும். (56)

# இலவச தாதியர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அவசரகால தாதியர்சேவையின்கீழ் இலவச தாதியர் பயிற்சி நெறி ஒன்று சாயி மருத்துவக் கல்லூரியில் பயிற்றப்பட்டுவருகின்றது.

அவசரகால தேவைகளின் போது சேவையாற்ற விரும்பும் ஆண்கள் இந்த தாதியர் பயிற்சி நெறியை பூர்த்தி செய்யலாம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத்தொழிலாளர்கள் புருணையில் அவதி

## -தப்பி வந்த பெண் தகவல்

இலங்கையில் இருந்து தொழில்வாய்ப்புப் பெற்று புருணைக்குச் சென்ற சுமார் 300 பேர் போதிய சம்பளமின்றி கஷ்டப்படுகின்றார்கள் என்று அங்கிருந்து தப்பி வந்த பெண்கள் இலங்கை தொழில் அமைச்சுக்கு புகார் செய்துள்ளார்கள்.

புருணையிலுள்ள ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றில் தொழில் பார்க்கச் சென்ற 250 பெண்கள் உட்பட 300 பேர் இருக்க இடமின்றியும். உண்ண உணவின்றியும், சம்பளமுமின்றி, அல்லல் படுகின்றனர் என்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களைக் கொண்டு அதிக வேலை வாங்குவதாவும், கைகளைக் கட்டி சித்திரவதைப்படுத்தப் படுகின்றார்கள் என்றும் தப்பி வந்த பெண்கள் தொழில் அமைச்சிடம் புகார், செய்துள்ளனர்.

## புடுவான்கரைப் பகுதிக்கு

# பனடோல், டிஸ்பிறின் கொண்டுசெல்லத் தடை

சிறிலங்கா இராணுவத்தின் அனுமதியுடனேயே மட்டக்களப்பு நகரில் இருந்து படுவான்கரைப் பிரதேசத்திற்கு மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பனடோல், டிஸ்பிறின் போன்ற மருந்துகளுக்கும் இதே கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும், கொழும்பில் இருந்தும் ஒரு குறித்த தொகைக்குமேல் மட்டக்களப்புக்கு மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்லக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லபட்டும் மருந்துகளுக்குச் சிறிலங்கா கூட்டுப் படைத்தலைமையக அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

நீரழிவு. இரத்த அழுத்தம், இருதயநோய் போன்ற நீண்டகால நோயாளிகள் வைத்தியசாலை கிளினிக் மருந்துகளையே நம்பியிருந்தனர் என்றும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டதால் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

---

ஏற்றுக்கொள்ள

யுமா என்பது சந்தேகமேஎன மலேசியப் பிரதமர் மகதீர் மொகமட் கருத்து வெளியிட்டுள்ளார்

சோவியத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் ஈராக்கின் கவனத்தை ஈர்த்துள்ளது என்று ஈராக்கின் ஆளும் புரட்சிகர சபையினதும், பாத்கட்சியினதும் சார்பில் அதிபர் சதாம் ஹுசைனும் கருத்து வெளியிட்டுள்ளார்.

---

## யாழ்ப்பாண மாநகரசபை அறிவித்தல்

### நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாக்கால தற்காலிகசந்தைக்கடைகள்

கீழ்வரும் கடைகள் 23.08.91 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடுவதன் மூலம் குத்தகைக்குக் கொடுபடவுள்ளன. ஏலத்தில் சித்தி பெற்றவர்கள் உடன் குத்தகைத் தொகையினைச் செலுத்தி இடத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

| | இந்துவிடுதிக்கு அருகாமை | பண்டாரமாளிகை வளவு |
|---|---|---|
| 1. மணிகாப்புக் கடைகள் | 01 | 13 |
| 2. கச்சான் கடலைக் கடைகள் | 22 | 10 |
| 3. இனிப்புக் கடைகள் | 07 | 11 |
| 4. ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள் | 12 | 04 |
| 5. இதர கடைகள் | 18 | -- |

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்
19-8-91

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்
(B/2873)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.